

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாரீஸில் நடைபெற உள்ள பாரா ஒலிம்பிக் 2024 – ல் மகளிருக்கான 67 கிலோ எடைப் பிரிவு பளுதூக்கும் போட்டிக்குத் தேர்வாகியுள்ள கஸ்தூரி ராஜாமணியை, நேற்று நேரில் சந்தித்து வாழ்த்தினார். ”தமிழ்நாட்டிலிருந்து ஒலிம்பிக்கில் களம் காணும் 16 ஆவது நபராக தேர்வாகியுள்ள வீராங்கனை கஸ்தூரி ராஜாமணியின் விமானப் பயணச் செலவு – தங்குமிடம் – உணவு – பயிற்சி மற்றும் இதர செலவுகளுக்காக ரூ. 7 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து வழங்கினோம். தங்கை கஸ்தூரி ராஜாமணி சர்வதேச அரங்கில் வெற்றி வாகை சூடி இந்தியாவிற்கும் – தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்கட்டும். என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தியுள்ளார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யமிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் – செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடன் உள்ளார்கள்.



தஞ்சாவூர் மாவட்டம் மேலவஸ்தாச்சாவடி அருகே புதியதாக கட்டி முடிக்கப்பட்டு தயார்நிலையில் உள்ள டைட்டல் நியோ பூங்காவின் கட்டுமானப்பணிகளை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில்துறை அமைச்சர் டாக்டர்.டி.ஆர்.பி.ராஜா , மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் ஆகியோர் நேற்று (09.07.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், சிப்காட் செயல் இயக்குநர் பி.ஆகாஸ், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் .டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.உஷா புண்ணியமூர்த்தி , மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் – தமது இல்லத்தில் நடத்தி வைக்கிறார்!

# அம்பத்தூர் தெற்கு - பகுதிப் பிரதிநிதி எம்.பி.கணபதி இல்லத் திருமண விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – முன்னணியினர் பங்கேற்பு

சென்னை,ஜூலை,10

அம்பத்தூர் தெற்குப் பகுதி- 89 வது வட்டம் பகுதிப் பிரதிநிதி எம்.பி.கணபதி - ஜி.வேளாங்கண்ணி ஆகியோரின் புதல்வி க. பவித்ராவுக்கும் சூ.பரம சிவம்,ப.வீராயி ஆகியோரின் புதல்வர் ப.அஜித்குமா ருக்கும் மணவிழா வருகின்ற 12.7.2024 - வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்லத்தில் ( ஆழ்வார் பேட்டை,சித்த ரஞ்சன் சாலை) நடைபெறுகின்றது.



மணவிழாவிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று மணவிழாவை நடத்தி வைத்து மண மக்களை வாழ்த்துகிறார்.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., பி.கே. மூர்த்தி, டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், எல்.பி.எப்.மோகன், எம்.இ. சேகர், எம்.ஏ.செந்தில் சுரேஷ் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பகுதி,வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள்,கழக செயல்வீரர்கள், குடும்பத்தினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பகுதிப் பிரதிநிதி எம்.பி.கணபதி நன்றி கூறுகிறார்.

### நே.சிற்றரசு தலைமை! நா.எழிலன் எம்.எல்.ஏ. முன்னிலை! ஆயிரம் விளக்கு -118வது வட்டம்

# எம்.காசி இல்ல மணவிழா வரவேற்பு! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

## மு.க.தமிழரசு - தயாநிதி மாறன் எம்.பி. - அன்பகம் கலை - மா.பா.அன்புதுரை பங்கேற்பு!

சென்னை, ஜூலை 10-

ஆயிரம் விளக்கு 118வது வட்டக் கழக துணைச் செயலாளர் எம்.காசி - மீனாட்சி ஆகியோரின் புதல்வர் கே.சதாசிவத்திற்கும் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் - கப்பான் கோட்டூர் எம்.ஏழுமலை - இ.ஆனந்தி ஆகியோரின் புதல்வி இ.ஜான்சிராணிக்கும் மணவிழா வரவேற்பு நாளை (11.7.2024 வியாழன்) மாலை 6.30 மணியளவில் சென்னை -14, லாயிட்ஸ் ரோட்டில் அமைந்துள்ள நல்வாழ்வு திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

மா.பா.அன்புதுரை, கோ.யுவராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இதில் மு.க.தமிழரசு, தயாநிதி மாறன் எம்.பி., அன்பகம் கலை, எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., கலைகதிரவன், எஸ்.மோகன், ந. இராமலிங்கம், எஸ்.மதன் மோகன், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், வினோத் வேலாயுதம், நுங்கை வி.எஸ்.ராஜ், ச.பரமசிவம், வி.என். ராஜன், நந்தனம் கி.மதி, எஸ்.முரளி,

து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, எம்.டி.ஆர்.நாதன், ஜெ.நற்குணநாதன், டி. ஜோஸ்டானியல், பா. ராபர்ட், வெற்றி செல்வி உள்ளிட்ட பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கே.கோவிந்தராஜ், கா. அப்பன்ராஜ், கே.கர்ணன், பி.பழனி, ஏ.கணேஷ்குமார், எம்.ஆனந்த்ராஜ், ஜி.தியாகராஜன், கே.நவீன்குமார், கே.சரன்ராஜ், கே.திவாகர், பி.மணி, எம்.நிஷாந்த் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### தஞ்சாவூர் மாவட்டம் –

# மேலவஸ்தாச் சாவடியில் ‘டைடல்’ பார்க் கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - டி.ஆர்.பி.ராஜா ஆய்வு!

தஞ்சை, ஜூலை 10-

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் மேலவஸ்தாச்சாவடி அருகில் டைட்டல் பார்க் கட்டட கட்டுமானப் பணிகளை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில் துறை அமைச்சர் டாக்டர். டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், தலைமையில் நேற்று (09.07.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வில் சிப்காட் செயற் இயக்குநர் பி.ஆகாஷ், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாண சுந்தரம் , தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண் இராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் மேலவஸ்தாச்சாவடி அருகில் 3.40 ஏக்கர் பரப்பளவில் 55,000 சதுர அடியில் ரூ 27.13 கோடி மதிப்பில் 4 அடுக்கு மாடி கட்டிடமாக டைட்டல் பார்க் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளின் படித்த பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவதற்காகவும், தொழில்நுட்ப புரட்சியை உருவாக்குவதற்காகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த டைட்டல் பூங்காவை அமைத்துள்ளார். இந்த டைட்டல் பூங்காவில் இது வரை 2 நிறுவனங்கள் தொடங்குவதற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்னும் 7 நிறுவனங்கள் தொடங்குவதற்கு காத்திருக்கின்றார்கள். எனவே, திறப்பதற்கு முன்பாகவே முழுமை அடைந்து விடும். இதன் மூலம் 1000க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது என தொழில் துறை அமைச்சர் டாக்டர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி மற்றும் பாளையம்பட்டியில் சுமார் 256 ஏக்கரில் அமைக்கப்பட உள்ள சிப்காட் தொழிற் பேட்டை இடத்தினை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில் துறை அமைச்சர் டாக்டர். டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா, வட்டாட்சியர்கள் அருள்ராஜ் (தஞ்சாவூர்), மரிய ஜோசப் (பூதலூர்) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கனடாவில் பன்னாட்டு இலக்கியத் திருவிழா!

# கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் எழுதிய கவிதைகளின் பெருந்தொகுப்பு வெளியீடு!

## கலாநிதி நா.சுப்ரமணியன் சிறப்புரை! தி.அமிர்தகணேசன் பங்கேற்பு!

ஸ்கார்பரோ, ஜூலை,10

தமிழ் எழுத்தாளர் இணையம், கனடா மற்றும் ஒருதுளிக்கவிதை, புதுச்சேரி இணைந்து நிகழ்த்தும் “பன்னாட்டு இலக்கியத் திருவிழா 2024” 14.07.2024 அன்று மாலை 4.00 மணியளவில் மெக்னிகோல் ஆவென்யூ தொகுப்பு 8, ஸ்கார்பரோவில் நடைபெறுகிறது.

கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் 90 ஆம் பிறந்தநாளை முன்னிட்டு, கலைமாமணி தி. அமிர்தகணேசன், (புதுச்சேரி) தொகுத்துள்ள கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் அவர்கள் எழுதியுள்ள 87 கவிதை நூல்களின் பெருந்தொகுப்பான “எரிதழலும் இளங்காற்றும்,” எனும் நூலையும் “நம்கால மகாகவி” எனும் நூலையும் கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், இந்தியா நாடுகளின் படைப்பாளர்கள் எழுதியுள்ள நூல்களையும் வெளியிட்டு, கலாநிதி நா. சுப்ரமணியன் சிறப்புரையாற்றுகிறார்.

இதில் தி.அமிர்த கணேசன், அகணி சுரேசு, சிவன் இளங்கோ, ஆர்.என். லோகேந்திரலிங்கம், சிவா. இரட்ணசிங்கம், பாஸ்கரன், சின்னத்துரை,உமை பற்குணரஞ்சன், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், இராஜ்மீரா இராசையா (கனி விமல்நாதன்), முனைவர். வாசுகி, நகுலராசா, க. சண்முக லிங்கம், முனைவர் சம்ப ந்தம், ஏகாம்பரம், பேராசிரியர் செ.இரா செல்வகுமார், சிவபாலு ஆகியோர் பங்கேற்கின்றனர்.

### கலை – பண்பாட்டுத் துறை சார்பில்

# சென்னையில் ‘ஓவியச் சந்தை’

## அரசு அருங்காட்சியக வளாகத்தில் - மூன்று நாட்கள் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 10-

கலை பண்பாட்டுத் துறையின் வாயிலாக ஓவிய மற்றும் சிற்பக் கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் வகையில், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் கலைஞர்களின் ஓவியம் மற்றும் சிற்பக் கலைப்படைப்புகளைக் காட்சிப்படுத்தி, விற்பனை செய்யும் ‘ஓவியச் சந்தை’ திட்டத்தினை செயல்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையின் அடிப்படையில் சென்னையில், 2.8.2024, 3.8.2024 மற்றும் 4.8.2024 ஆகிய மூன்று நாட்கள் சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் ஓவியம் மற்றும் சிற்பக் கலைப்படைப்புகளைக் காட்சிப்படுத்தி, விற்பனை செய்யும் ஓவியச்சந்தை திட்டம் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டினைச் சேர்ந்த ஓவிய, சிற்பக் கலைஞர்கள் இத்திட்டத்தில் பயன்பெற ஏதுவாக, தாங்கள் காட்சிப்படுத்தி, விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ள கலைப்படைப்புகளின் விவரங்கள், அதற்குரிய புகைப்படங்கள், கலைப் படைப்புகளின் விற்பனைத் தொகை ஆகிய விவரங்களுடன் கூடிய விண்ணப்பத்தினை 23.7.2024க்குள், பின் வரும் முகவரிக்கு அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதல்வர்(பொ), அரசு கவின் கலைக் கல்லூரி, ஈ. வே.ரா.பெரியார் சாலை, சென்னை600 003. தொலைபேசி எண்.04425610878, விண்ணப்பங்களை கலை பண்பாட்டுத்துறையின் இணையதளத்தில் (www.artandculture.tn.gov.in) இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இவ்வாறு கலை பண்பாட்டுத் துறை அறிவித்துள்ளது.

### 148–வது பிறந்த நாள்: ‘தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை’

# மறைமலையடிகளார் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## அமைச்சர் பெருமக்கள் – மாலை அணிவித்து சிறப்புச் செய்கின்றனர்!

சென்னை, ஜூன் 10 -

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகளாரின் 148-வது பிறந்த நாளில் அவரது திருவுருவச் சிலைக்கு அமைச்சர் பெருமக்களால் மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படுகிறது.

அதன் விவரம் வருமாறு:-

தனிப்பெரும் தமிழ் மாமலை - மறைமலையடிகளார் தமிழகப் புலவர் பெருமக்களுள் மறைத்திரு மறைமலையடிகளார், தனித்தமிழ்த் தந்தையாக மட்டுமின்றித் தனித்திறம் படைத்த பல்கலைப் பேரறிஞராக விளங்கினார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளில் வல்லுநராகத் திகழ்ந்த அடிகளார் சமயம், சமுதாயச் சீர்திருத்தம் நலத்துறை ஆகிய மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் துறைகளிலும் தமது அறிவாற்றலைச் செலுத்தி அரிய பல நூல்களைத் தனித்தமிழில் எழுதியும் மன்றங்களிலும், மாநாடுகளிலும் அரிய உரைகளை நிகழ்த்திய பண்பாளராகத் திகழ்ந்தவர் ஆவார்.

தமிழர்கள் அனைவரும் தூயதமிழ் பேச வேண்டும் என்ற நோக்கில் ‘தனித்தமிழ் இயக்கம்’ தொடங்கித் தமிழுக்காக செழும் பணியாற்றியவர் மறைமலையடிகள். பாங்கறிந்து சொற்பொழிவுகள் ஆற்ற வல்லவர், சைவத் திருப்பணியும் சீர்திருத்தப் பணியும் செவ்வனே செய்த செம்மல். ‘தமிழ்க்கடல்’, ‘தனித்தமிழின் தந்தை’ என்றெல்லாம் தமிழுலகத்தால் போற்றப்பட்டவர் மறைமலையடிகள் ஆவார்.

தவத்திரு மறைமலையடிகள் 1876ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15ஆம் நாள் நாகைப்பட்டினத்தில் பிறந்தார். இவர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்று மாணவர்களுக்கு எளிய முறையில் பாடம் கற்பித்தவர். திராவிட மஞ்சரி, பாசுகர ஞானோதயம், நீலலோசனி, ஞானசாகரம் ஆகிய இதழ்களில் இவரின் தீஞ்சுவைக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. பட்டினப் பாலை, முல்லைப் பாட்டு ஆகிய நூல்களுக்கு ஆராய்ச்சியுரை எழுதியும்,திருவொற்றியூர் முருகன்மு ம்மணிக் கோவை, சோமசுந்தரக் காஞ்சியாக்கம் முதலிய செய்யுள் நூல்களையும், சிந்தனைக் கட்டுரைகள், அறிவுரைக் கொத்து, சிறுவர்களுக்கான செந்தமிழ், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர் போன்ற கட்டுரை நூல்களையும், குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள் முதலிய புதினங்களையும் எழுதியுள்ளார். வடமொழியில் காளிதாசர் எழுதிய சாகுந்தலத்தை மொழிபெயர்த்து சாகுந்தல நாடகம் என்ற பெயரில் நூலையும், அம்பிகாபதி அமராவதி என்ற நாடக நூலையும் எழுதியுள்ளார்.

‘தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை’ மறைமலையடிகளாரின் 148 ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு அவரைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம், பல்லவபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு 15.07.2024 திங்கட்கிழமையன்று காலை 10.30 மணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள்,தாம்பரம் மாநகராட்சி மேயர், தாம்ப ரம் மாநகராட்சியின் துணை மேயர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தமிழறிஞர்கள்ஆகியோரால் மலர் வணக்கம் செய்யும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டுள்ளது.



முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (08.07.2024) பாஸ்டனில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு மருத்துவக் கட்டமைப்பு பற்றிய விளக்க உரையாற்றினார். இந்நிகழ்வில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மரு.நாராயணசாமி, ஹார்வார்டு பல்கலைக்கழக மருத்துவப் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

### உத்தரப்பிரதேசம் – ஹத்ராஸ் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கு:

# உடனடியாக விசாரணைக்கு பட்டியலிடப்படும்!

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உறுதி!

புதுடெல்லி, ஜூலை 10-

121 பேரை பலி கொண்ட ஹத்ராஸ் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கு உடனடியாக விசாரணைக்கு பட்டியலிடப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உறுதி அளித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராசில் கடந்த 2ம் தேதி நடந்த போலே பாபா என்ற சாமியாரின் ஆன்மீக சொற்பொழிவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் பலியாயினர். இந்த விவகாரத்தில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரான தேவ் பிரகாஷ் மதுக்கர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர். தலைமறைவாக உள்ள சாமியார் போலே பாபாவை போலீசார் தேடி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த சம்பவம் குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று வழக்கறிஞர் விஷால் திவாரி என்பவர் உச்சநீதிமன்றம் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கை அவசரமாக விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்றும் முறையிட்டார்.

இதையடுத்து, ஹத்ராஸ் சம்பவம் தொடர்பான வழக்கு உடனடியாக விசாரணைக்கு பட்டியலிடப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் உறுதி அளித்துள்ளார். இதனால், இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.